## பகுதி - 1: வழிபாட்டு வழிகாட்டி

01.08.2016 தூய அல்போன்ஸ் மரிய லிகோரி - திருப்பலி
05.08.2016 தூய கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு - திருப்பலி
06.08.2016 ஆண்டவரின் தோற்றம் மாற்றிய விழா - திருப்பலி
07.08.2016 ஆண்டின் பொதுக்காலம் 19ம் ஞாயிறு - திருப்பலி
14.08.2016 ஆண்டின் 20ம் ஞாயிறு - திருப்பலி
15.08.2016 தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு, இந்திய சுதந்திர தினம் - திருப்பலி
16.08.2016 தொன் போஸ்கோ பிறந்த தினம் - திருப்பலி
20.08.2016 புனித பெர்னார்து - திருப்பலி
21.08.2015 ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறு - திருப்பலி
22.08.2016 அரசியான தூய கன்னி மரியாள் - திருப்பலி
24.08.2016 புனித பர்த்தலமேயு (நத்தானியேல்) - திருப்பலி
27.08.2016 தூய மோனிக்கம்மாள் - திருப்பலி
28.08.2016 ஆண்டின் 22ம் ஞாயிறு - திருப்பலி
29.08.2016 திருமுழுக்கு யோவானின் பாடுகள் - திருப்பலி

## பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

1. தூய மோனிக்கம்மாள் - தூய அகுஸ்தின் தாயும் சேயும் நமக்குத் தரும் பாடங்கள்
2. தூய தொன் போஸ்கோவின் வாழ்வில், பணியில் இறை இரக்கம்
3. தூய ஜான்மரி வியான்னி இறை இரக்கத்தின் கருவி
4. தூய மாக்சிமில்லியன் கோல்பே
5. திருச்சபை செய்திகள்

# பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.08.2016 தூய அல்போன்ஸ் மரிய லிகோரி திருப்பலி

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

தூய அல்போன்ஸ் மரிய லிகோரியின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் அவரது வாழ்வின் வழியை பின்தொடர முயற்சிப்போம். இவர் இத்தாலி நாட்டில் நேபிள்ஸ் அருகில் மரியநெல்லா என்னும் இடத்தில் 1696ம் ஆண்டு செப்டம்பர் 27ம் நாள் பிறந்தார். ஏழு பிள்ளைகளுள் முதலாவதாக பிறந்த இவர் 16ம் வயதில் சட்டம் படிக்கச் சென்றார். கசடற கற்று புகழ்பெற்ற வழக்குரைஞர் ஆனார். பணியின் இடையே வெறுமையை உணர்ந்தார். தமது 27வது வயதில் துறவற வாழ்வைத் தேர்ந்துக் கொண்டார்.

தந்தையின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் உறுதியுடன் போராடி தந்தையின் சம்மதத்துடன் 1723ல் குருமடத்தில் சேர்ந்த லிகோரி 1726ம் ஆண்டு டிசம்பர் 21 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். நேபிள்ஸ் நகரில் 1729ல் மறைப்பணியை ஆரம்பித்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவருக்கு அதிர்ச்சியளித்தது. மிக மோசமான நிலையில் வாழும் ஏழைகள், எல்லா வகையிலும் கைவிடப்பட்டோர் என அனைவரையும் கண்டார். இவர்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற ஊக்கமுள்ள அவரை அருள் சகோதரி மரிய செலஸ்தே கிராஸ்தரோசா என்பவரைச் சந்தித்தார்.

லிகோரி புதிய சபையொன்றை தொடங்க வேண்டுமென்று கடவுள் தனக்கு வெளிப்படுத்தியதாகக் கூறினார். கடவுளின் வெளிப்பாட்டை ஏற்ற லிகோரி 1732ம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று இரட்சகர் சபையை நிறுவினார். 1762ம் ஆண்டு ஆயராக திருப்பொழிவு பெற்றார். சிறந்த மறையுரைகளால் மக்களின் மனதை ஈர்த்தார். மேலும் தமது மறையுரைகள், கட்டுரைகள், புத்தகங்கள் அனைத்திலும் நற்கருணைக்கும், அன்னை கன்னி மரியாவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். லிகோரி எழுதிய அறநெறி இறையியல், மரியாவின் புகழ்மாலை, இரட்சண்ய பாதை, கிறிஸ்துவின் உண்மை, மறைவாழ்வு போன்ற நூல்கள் புகழ்பெற்றவையாகும். எளியோருக்குப் பணியாற்ற இறைவன் எல்லோரையும் அழைக்கிறார். நாமும் அவரின் குரலுக்கு செவிமடுப்போம். பேறுபெற்றோராய் வாழ்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவராகிய எம் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் அனைவரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை உமது அன்பு சீடர்களாக ஏற்று காத்து வழிநடத்தும் படி உம்மை மன்றாடுகிறோம்.

2. சமூகத்தில் ஒதுக்கப்பட்டு வாழ வழியற்று தவித்த ஏழை மக்களுக்கு பணியாற்றிய புனித லிகோரி போன்று உதவிபுரியும் உள்ளத்தை எமக்கு அருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆபத்து வேலையில் ஆறுதல் அளிக்கும் இயேசுவே, கடலில் மூழ்கிய பேதுருவுக்கு அன்று கைகொடுத்து தூக்கியதுபோல் துன்ப துயரங்களிலும் எல்லா சோதனைகளிலிருந்து எம்மையும் கைதூக்கி காத்தருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 05.08.2016 தூய கன்னி மரியாவின் பேராலய நேர்ந்தளிப்பு திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

லிபேரியுஸ் திருத்தந்தையாக இருந்த காலத்தில் (352-366) உரோமையில் வாழ்ந்த யோவான் என்பவர் குழந்தை இல்லாமல் இருந்தார். தனக்கான வாரிசு வேண்டி இவரும், இவரின் மனைவியும் அன்னை மரியிடம் இடைவிடாது செபித்தார்கள். குழந்தை வரம் தந்தால் தங்கள் சொத்துக்களை அன்னை கன்னிமரியின் பெயர் விளங்க பயன்படுத்துவதாக நேர்ச்சை வைத்தார்கள். ஆகஸ்டு மாதம் கடுமையான வெயில் அடிக்கும் மாதம். ஆனால் அன்னையின் புதுமையால் திரு. யோவான் அந்த எஸ்கலின் மலையில் எங்கு திருத்தலம் எழுப்ப வேண்டுமோ அந்த இடத்தில் மட்டும் அன்னை பனிமழைபொழிய செய்து திரு. யோவானுக்கு அடையாளம் காட்டினார். திரு. யோவான் அந்த அதிசயத்தை திருத்தந்தையிடம் கூறி, அதனைப் பார்த்த திருத்தந்தையும் அன்னையின் அற்புதத்தினை ஏற்றார்.

அன்னையின் சாட்சியையும், வேண்டுதலையும் திருத்தந்தை லிபேரியுசிடம் தெரிவித்தார். அதனை ஏற்ற திருத்தந்தை அன்னைக்கு ஓர் பேராலயம் எழுப்ப அனுமதியளித்தார். 431ம் ஆண்டு எபேசு நகரில் திருச்சங்கம் கூடியது. அச்சங்கம் அன்னை கன்னிமரியா இறைவனின் தாய் என்று அறிக்கையிட்டது. இதனை நினைவு கூறும்

விதமாக திருத்தந்தை சிக்ஸ்துஸ் அப்பேராலயத்தை புதுப்பித்து அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார். இறைவனின் தாயாம் அந்த அன்னை மரியாயிடம் நம் குடும்பத்தையும் ஆசீர்வதிகதும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உம்மையே எமக்காக கையளித்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் நீர் பகிர்ந்த சான்றுக்கேற்ப இரக்கத்தின் ஆண்டில் உறுதியோடு வாழ தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. நிலைவாழ்வை பொழியும் வள்ளலே இறைவா, உம்மால் வாழ்வளிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீர் ஒருவரே எங்கள் தஞ்சம் என்பதை உணர்ந்து உம்மோடு இணைந்திருப்பதே எங்கள் வாழ்வின் இலக்காக கொண்டு உம்முடைய வழிகாட்டுதலின்படி வாழ்ந்து உம்மீது விசுவாசத்தில் நிலைத்து நிற்கின்ற மக்களாக வாழ வரமருள தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் அன்னை மரியாளைப்போன்று கிறிஸ்துவுக்கு ஏற்ற பிள்ளைகளாக வாழ்ந்து அதன்மூலம் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் என்று தூய கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கமே உருவான இறைவா, குடிபழக்கம், போதை, காமவெறி, கொலை, கொள்ளை போன்ற தீய பழக்கங்கள் உள்ளவர்களை உமது குணமாக்கும் வல்லமையால் ஆட்கொண்டு அவர்களை தீய பழக்கத்திலிருந்து முற்றிலும் குணமாக்கி முழுமையான விடுதலையைப் பெற்று நலமோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று தூய கன்னி மரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 06.08.2016 ஆண்டவர் தோற்றம் மாறிய விழா திருப்பலி

திரு. V. ஆக்னஸ் மெலின்டா

**முன்னுரை**

இறையேசுவில் இனிய சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் நமக்கு இயேசு கிறிஸ்துவின் மகிமையை உணர்த்துவதாகவும், இயேசு கிறிஸ்துவின் மனித தன்மைக்கும், இறைத்தன்மைக்கும் உள்ள உறவை உலகிற்கு அறிவிப்பதாகவும் உள்ளது. முதல் வாசகத்தில் (தானி. 7:9-10,13-14) கடவுள் எவ்வாறு தோற்றமளித்தார் என்றும், அவர் இறைமகனை மகிமை செய்யும் காட்சியையும் காண்கிறோம். இரண்டாவது வாசகத்திலே (2பேதுரு 1:16-19) இயேசுவின் உருமாற்றத்தை கண்ணால் கண்டவறான தூய பேதுரு அக்காட்சியை விளக்குகிறார். "என் அன்பார்ந்த மகன் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று தந்தை இறைவன் இயேசுவை மகிமைப்படுத்தியதை தெரிவிக்கிறார். கடவுள் தன் மகிமையை விளங்கச்செய்த குறிப்பிடத்தக்க தருணங்கள் மலை உச்சியிலேயே நிகழ்ந்திருக்கின்றன.

இயேசுவின் கீழ்ப்படிதலை அவரை கடவுளுக்கு பிடித்த ஒன்றாக அமைகின்றது. கடவுளின் வார்த்தைகளுக்கேற்பக் கீழ்ப்படிந்ததினாலேயே அவர் மகிமைப்படுத்தப்பட்டார். நமக்கும் அந்த மகிமையை வழங்க கடவுள் காத்திருக்கிறார். நம்மை கடவுளுக்கு கீழ்ப்படிதல் உள்ளவர்களாக வாழ அழைக்கின்றார். அதற்காக சிறந்த முறையில் நம்மையே தயாரித்துக்கொள்ள இத்திருப்பலியில் பக்தியோடு பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கத்தின் ஊற்றே இறைவா, நீர் எங்களையும் மகிமைப்படுத்துவீர் என்று விசுவசிக்கின்றோம். அதற்கு நாங்கள் உமது வார்த்தைகளின்படி வாழவும், உமக்கு கீழ்ப்படிபவர்களாய் மாறவும் எங்களுக்கு போதுமான ஞானத்தையும், விவேகத்தையும் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, உமது இரக்கம் எவ்வளவு பெரியது, பாவம் செய்தோம் ஆனால் நீர் எங்களை மீட்டு இரட்சித்தீர். எங்கள்மீது நீர் கொண்ட அன்பினாலேயே பெரும் பாடுகளை ஏற்றீர். மேலும் பாவிகளாய் வாழ்ந்து உமக்கு நாங்கள் பாடுகளைத்தராமல் உமது பிள்ளைகளாய் கீழ்ப்படிந்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கீழ்ப்படிதலே அனைத்து நன்மைகளுக்கும் தொடக்கமாயிருக்கிறது. ஆனால் நாங்கள் எப்போதுமே மற்றவர் எங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற ஆணவத்துடனேயே வாழ்கிறோம். கீழ்ப்படிய மறுக்கிறோம், தயைநிறைந்த இறைவா, எங்கள் ஆணவத்தைப் போக்கி உம்மைப்போலவே கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் மாற/வாழ உமது இரக்கத்தை எங்கள்மேல் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவனாய் இருக்கிறேன் என்று கூறியதுமட்டுமல்ல அவ்வாறே வாழ்ந்துக்காட்டினீர். நாங்களும் உம்மைப்போல் சாந்த குணமும், தாழ்ச்சியான மனநிலையும் உள்ளவர்களாய் வாழ்ந்து உம்வழி நடக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 07.08.2016 ஆண்டின் பொதுக்காலம் 19ம் ஞாயிறு **திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இயேசு கிறிஸ்துவில் பிரியமான இறைமக்களே, இறைவனிடம் கொண்டிருக்கும் அளவற்ற நம்பிக்கை நம்மை எவ்வாறு வழிநடத்துகிறது என்பதை சிறிது சிந்திப்போம். இந்த நம்பிக்கையால்தான் நம் மூதாதையர் நற்சான்றும், நல்வாழ்வும் பெற்றனர். ஆதனால் இறைவனாகிய தந்தையை புகழ்ந்துப் பாடினர். விசுவாசத்தின் தந்தையான ஆபிரகாம், ஆண்டவர் கைகாட்டிய இடத்திற்குச் சென்றார். வாழ்வும் பெற்று வாரிசும் பெற்றார். அவரது வழிதோன்றல்களான ஈசாக்கும், யாக்கோபும் பல நன்மை தனங்களை ஆண்டவரிடமிருந்து பெற்றனர். வானத்திலுள்ள விண்மீன்கள் போல கணக்கற்ற மக்கட்செல்வங்களுடன் வாழ்ந்தனர்.

இன்றைய நற்செய்தியிலும் தலைவர் வரும்போது பணியாளர் விழித்திருந்து தன் கடமையை செய்து கொண்டிருப்பாராகில் அவரையே தன் உடமைகளுக்கெல்லாம் அதிபதியாக செய்வார் என்று கூறப்பட்டுள்ளது. "எங்கு உங்கள் செல்வம் உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" என்றும் கூறுகிறார் இயேசுகிறிஸ்து. விழித்திருந்து மேலானவை எவை என்று கண்டுணர்ந்து அதில் நம் நோக்கத்தையும், முயற்சிகளையும் செலவிடுவதே போற்றுதற்குரியது. ஆகவே எந்நேரத்திலும் இறைவனை எதிர்பார்த்து செயல்படவேண்டும். நாளை நம்முடையது என்று செய்வதை இன்றே திருந்த செய்வோம் பலனை எதிர்பார்க்காது பணியை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் மூதாதையர்கள் எப்படி இறைவனின் நம்பிக்கையை பெற்று செயல்பட்டார்களோ அதுபோல உமது நம்பிக்கையையும், ஆற்றலையும் அருளையும் பெற்று திருச்சபை தழைத்தோங்க பாடுபட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் இறைவா, விழிப்பாயிருங்கள் என்றுரைத்த உமது வார்த்தைகளின்படி எங்களது கிறிஸ்தவ சமுதாயம் விழிப்பாயிருந்து அநீதிக்கு எதிர்த்துப் போராடி உமது வருகைக்கு சித்தமாயிருக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. தியாகத்தின் இறைவா, குடும்பங்களில் பெரியவர்களை, பெற்றோர்களை பேணி பாதுகாத்து, தியாக மனப்பான்மையுடன் தங்களது விருப்பு வெறுப்புக்களை துறந்து வாழும் உணர்வுகளை இக்கால பிள்ளைகளின் மனதில் விதைக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. ஒற்றுமையின் இறைவா, அருள்பணியாளர்களும், பொதுநிலையினரும் மிகவும் அந்நியப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் பொதுநிலையினரின் முக்கியத்துவம் உணர்ந்து அவர்களிடம் தோழமை உறவுடன் நட்புக் கொள்ளவும் அருட்பணியாளர்களை கிறிஸ்துவின் சாயலிலும் அர்ச்சிப்பிலும் உணர்ந்து அன்பு பாராட்டவும் ஆதரிக்கவும் பொதுநிலையினர் கடமைப்பட்டவர்கள் என்பதை உணரவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 14.08.2016 ஆண்டின் 20ம் ஞாயிறு **திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

உண்மையான அமைதியைத் தருபவரே இயேசு

பொதுக்காலத்தின் இருபதாம் ஞாயிற்றுக்கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய வாசகங்கள் நம்மை உண்மையான அமைதியின் கருவிகளாக வாழ அழைக்கின்றது. பொதுவாக, அன்பை அல்ல, பிளவையே உருவாக்க வந்தேன் என்று சொல்கிறபோது நமக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமாயும் இருக்கிறது. ஆனால் இயேசு மேலோட்டமான அமைதியை அல்ல, உண்மையான அமைதியையே ஏற்படுத்த வந்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இயேசு தரும் அமைதி உண்மையில் நேர்மையின் போராட்டத்தில் விளைவது. அதற்காக நாம் இன்றைய முதல் வாரத்தில் எரேமியா இறைவாக்கினர் அனுபவிக்கும் துன்பங்களைப்போன்ற சவால்களைச் சந்திக்கவும் நேரிடலாம். இறைவாக்கினர் எரேமியா இயல்பாகவே மென்மையான அன்புள்ளம் கொண்டவர். ஆயினும் மக்களுக்கெதிராகத் தண்டனைத் தீர்ப்புரைக்குமாறு இறைவனால் அழைக்கப்பட்டார். ஆனாலும் "இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்". நாம் நேர்மையோடும் உண்மையாகவும் வாழ்கின்றபோது பல பிளவுகள், பிரச்சனைகள் வரலாம். ஆனால் அவை எல்லாவற்றிற்கும் இறுதியில் ஒரு முழுமையான அமைதி வருமே அதுதான் இயேசு விரும்பும்

உண்மையான அமைதி. அப்படிப்பட்ட அமைதியைத் தருவதாகத்தான் இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு உறுதியளிக்கின்றார். ஆகவே, உண்மையான அன்பையும் அமைதியையும் இப்புவியினில் விதைத்து, நிறைவான இறையருளைப் பெற்று வாழ்வதற்காகப் பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உண்மையான அமைதி தரும் இயேசு ஆண்டவரே, திருச்சபையை வழி நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டு நம்பிக்கையை இழந்துவிடக் கூடிய ஆபத்துக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வழிதவறி செல்லாமலிருக்க தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் நாயகனே இறைவா, இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட கத்தோலிக்க மக்கள், சூழ்நிலையின் காரணமாக அமைதியற்ற வாழ்க்கையில் நுழைந்து, தூய்மை வாழ்வை இழந்து வாழ்ந்துக்கொண்டிருக்கும் உம் பிள்ளைகளுக்கு தேவையான நல்லதொரு மாற்றத்தினை ஏற்படுத்தி, தங்கள் வாழ்வில் உம்மை பின்பற்றி வாழத் தேவையான ஞானத்தையும், தெய்வ பயத்தையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் ஆண்டவரே இறைவா, இறையாட்சிக்கு எதிராக செயல்படும் தீய சக்தியை எரிக்கும் தீயை இயேசு வலியுறுத்துகிறார். தூய ஆவியின் துணைக்கொண்டு இறையாட்சியை உலகில் மலரச் செய்ய நாம் தியாக மனம் படைத்தவர்களாகவும் இயேசுவின் வாழ்வை எடுத்துக்காட்டாக வாழ்ந்து, அமைதிக்கு சாட்சியாக விளங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.08.2016 தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு, இந்திய சுதந்திர தினம் திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

"வானிலே பெரியதோர் அடையாளம் தோன்றியது,
பெண் ஒருவர் காணப்பட்டார்,
அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருக்கிறார்,
நிலா அவரது காலடியில் இருந்தது.
அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்".

இறைவனின் திருவுளப்படி இயேசுவின் தாய் மரியா, இவ்வுலக வாழ்க்கைப் பயணம் நிறைவுற்றதும், உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்கு அழைத்துக் கொள்ளப்பட்டார். இந்த உண்மை எல்லாக் கத்தோலிக்க மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கிறிஸ்துவ கோட்பாடு என 1950ம் ஆண்டு நவம்பர் முதலாம் தேதி திருத்தந்தை 12ம் பத்திநாதரால் விசுவாச அறிக்கையாக வெளிப்படுத்தப்பட்டு வரையறுக்கப்பட்டது. இப்பெருவிழா, பாரம்பரியமாக கீழ்த்திருச்சபையில் நான்காம் நூற்றாண்டிலிருந்தே "டார்மிஷன்" என்ற பெயரில் கொண்டாடப்பட்டது. "டார்மிஷன்" என்றால் அன்னை ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறார்" என்ற பொருளாகும். திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் 1568ம் ஆண்டு அகில உலகத் திருச்சபை முழுவதும் இவ்விழாவைக் கொண்டாட அனுமதி அளித்தார்.

நமது இந்திய நாடு தமது 69வது சுதந்திர நாளை அரசு விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. சுதந்திர இந்தியாவில் வாழ்கிறோம். கிறிஸ்தவ மக்கள் தேசப்பற்றோடு இந்தியராக வாழ்வதில் பெருமைக்கொள்கிறோம். மக்கள் எல்லா நலன்களும் பெற்று, சுதந்திரக் காற்றை ஆரோக்கியமாக சுவாசிக்க விண்ணேற்றம் அடைந்த அன்னை எல்லாம் வல்ல இறைவனிடம் பரிந்து பேசுவாராக. நாமும் நமதன்னை மரியாவின் பண்பில் வளர்ந்து, பிறரை சிறப்பாக நலிந்தோரை வாழவைத்து, இந்தியாவையே இறையாட்சியாக வளர்த்தெடுக்க நம்மை நாம் ஈடுபடுத்தி, மரியா பெற்ற மகிமையில் பங்கு பெற்று, சீடத்துவ வாழ்வின் மூலம் இயேசுவின் மாட்சியில் நிச்சயம் பங்கு பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. சிலுவை நாயகனே இறைவா, இயேசுவின் மகிமை அவரது சிலுவைதான். ஏனெனில் அதில்தான் அவர்தம் உயிரை ஈந்து உலகிற்கே மீட்பைப் பெற்றுத்தந்தார். அவ்வாறே மரியாவின் விண்ணேற்பும் மாட்சியும் அத்தகையதே. இன்றும் நம்முடனிருந்து இயேசுவின் வழியில் நமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் பொதுநிலையினரை வழிநடத்தத் தேவையான வரங்களைப் பெற்றுத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நலன் காக்கும் நல்லாயனே எம் இறைவா, நம் பாரத நாடு சுதந்திரம் பெற்று 69ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டது. இந்தியாவை ஆளுகின்ற தலைவர்கள், அன்பு, உண்மை, நீதி, நேர்மை, தியாகம், பரிவிரக்கம் எனும் இயேசுவின் இறையாட்சிப் பண்புகளின் மாதிரியாக விளங்கி, மக்களுக்கு நம்பிக்கையான நல்லாட்சியைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளித்து வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, பிறர் காயங்களை குணமாக்குவதால்தான் நம் காயங்கள் ஆறுகின்றன. பிறர் பாரங்களைப் பகிர்ந்து கொள்வதால்தான் நம் சுமைகளும் எளிதாகின்றன. பிறர் வாழ்விற்கு அர்த்தம் தருவதால்தான் நம் வாழ்வும் அர்த்தம் பெறுகின்றன. பிறர் பாதைக்கு விளக்கேற்றுவதால்தான் நம் பாதைகளும் ஒளிபெறுகின்றன. எனவே ஆண்டவரே, இவ்வரிய மனிதநேயப் பண்புகளோடு வாழும் உயர்ந்த பண்புகளை எங்கள் உள்ளத்தில் பதித்து வாழ்ந்திடத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 16.08.2016 தொன் போஸ்கோ பிறந்த தினம் திருப்பலி

திரு. ஜான் அலெக்ஸ்

### முன்னுரை

அன்புக்குரியவர்களே, கடவுள் கொணர்ந்த மீட்பின் செய்தியை தங்கள் வாழ்வாலும் வார்த்தையாலும் தாங்கள் வாழுகின்ற சூழலில் பல்வேறு வாழ்வு நிலைகளை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு எண்பித்து காட்டுபவர்கள் புனிதர்கள். மேலும் தனிமனிதனின் வாழ்வை சீர்ப்படுத்தி தனது அளவற்ற அன்பையும் இரக்கத்தையும் பொழியும் இறைவன் என்றும் நம் அருகில் உள்ளார் என்பதற்கு சாட்சியம் பகர்ந்த நம் தந்தை புனித ஜான் போஸ்கோவின் 201ம் பிறந்த நாளை இன்று உலகெங்கும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பெக்கி என்னும் சிற்றூரில் பிறந்த இப்புனிதர் 19ம் நூற்றாண்டில் வடஇத்தாலியிலுள்ள தூரின் நகரத்திற்கு வாழ்வாதாரம் தேடி புலம்பெயர்ந்த எண்ணற்ற இளையோருக்கு நல்லாசானாய், இறையன்பின் தூதுவராய், நண்பராய், வழிகாட்டியாய் திகழ்ந்தவர் என்று அகிலம் போற்றுகிறது. ஆனால் ஜான் போஸ்கோவின் இளமைப்பருவம் துன்பங்கள் நிறைந்ததாக இருந்தாலும் அவர் இறைப்பராமரிப்பின் மீது கொண்ட தளரா நம்பிக்கை அவருக்கு வலுவூட்டியது. இளையோரின் புனிதர் என்றழைக்கப்படும் தொன் போஸ்கோவின் வாழ்வும், கல்விமுறையும், ஆன்மீகமும் காலத்தாலும் பண்பாட்டாலும் முற்றிலும் வேறுபட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினருக்கும் ஏற்றதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றல்மிக்க வாழ்வையும் உத்வேகம் தரும் ஒளியையும் பெற்று புனித பாதையில் நாமும் நம் இளையோரையும் வழிநடத்திட வேண்டும் என்பதே தொன் போஸ்கோவின் எதிர்ப்பார்ப்பு. புனிதர்களாக நாம் மாற தேவையான வரம் வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. பரிவன்புமிக்க தந்தையே, பிறரை உண்மையின் ஒளிக்கு கொண்டு வருவதில் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் செலவிட்ட எம் புனிதர் தொன் போஸ்கோவின் நிறைவான அன்பை நாங்களும் கடைபிடித்து பிறர் நல்வாழ்விற்கு குறிப்பாக ஏழை எளிய இளையோருக்கு வழிகாட்டிகளாக விளங்க தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

2. இரக்கத்தின் இறைவா, நாங்கள் தவறுவது எங்கள் வலுவின்மையால்தான் என்பதை நீர் அறிவீர். உம் புனிதர்களின் வேண்டுதலாலும் அவர்களுடைய நல்வாழ்வை நாங்கள் பின்பற்றுவதாலும் மாறாத உமது அன்பில் நாங்கள் என்றும் நிலைத்து அதை அனுபவிக்க அருள்தர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. விசுவாசிகளின் ஒளியும் மேய்ப்பருமாகிய இறைவா, புனித ஜான் போஸ்கோ காட்டிய வழியில் இளையோரின் நலனுக்காக தங்களை அர்ப்பணித்து வாழும் எமது சலேசிய குடும்பத்திற்காக மன்றாடுகிறோம். தொன் போஸ்கோ வாழ்ந்து வழங்கிய இப்புனிதப் பாதையில் நாங்கள் நடந்து, புனிதத்தை எளிய வழியில் அடைய முடியும் என்பதை நன்கு உணர வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்னை மரியாவின் மீது நம்பிக்கை வையுங்கள், புதுமைகளை காண்பீர்கள் என்று சொன்ன இப்புனிதரின் ஊக்க வாக்கையும், ஆன்மாக்களை மீட்க அவர் வாழ்ந்த எளிய வாழ்க்கையையும் நாங்கள் கடைபிடித்து வாழ்ந்து உமது சாயலைத் தாங்கியவர்களாய் மாற துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 20.08.2016 புனித பெர்னார்து — திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

இன்று புனித பெர்னார்து விழாவை திருச்சபை கொண்டாடி மகிழ்கிறது. நாமும் இத்திருப்பலி வழியாக இவ்விழாவை சிறப்பித்து அதன் அர்த்தத்தை புரிந்து அதன்படி வாழுவோம். இவரின் காலம் கி.பி. 1091-1153 ஆகும். இளைஞனாக இருந்த இவர் பெரிய பிரபு குடும்பத்தில் பிறந்தாலும் தனது படிப்புகளை முடித்த நேரத்தில் உலக செல்வாக்கு அனைத்தையும் துறந்து, புனித பெனடிக்ட் தொடங்கிய துறவு மடத்தில் சேர்ந்தார். இதுவே சிற்றோ நகரில் நிறுவப்பட்ட முதல் துறவு மடம். இங்கு கடுமையான ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட்டது. இவர் மட்டுமல்ல, இவரோடு உடன்பிறந்த நால்வரும் அவருடைய மாமனும் இங்கு சேர்ந்தனர். பல ஆண்டுகளாக இம்மடத்தில் யாரும் வராத நிலையில் இவருடன் மேலும் 31 இளைஞர்கள் சேர்ந்து இம்மடத்தின் அப்போது அதிபதியாக இருந்த புனித ஸ்டீபனுக்கு அளவில்லாத ஆனந்தம் அளித்தது.

பெர்னார்து தனிமை, தவம், செபம் இவற்றை எவ்வளவு அன்பு செய்தாரோ அந்தளவுக்கு அவருடைய ஆன்மீகத் தொண்டு வெளிஉலகிற்கு தேவைப்பட்டது. அடுத்தடுத்து வந்த திருத்தந்தையர்கள் இவரின் ஆன்மீக ஆலோசனையை இடைவிடாது நாடினர். கி.பி. 12ம் நூற்றாண்டின் மாமனிதர் என்றால் பெர்னார்து தவிர வேறு யாருமில்லை. அந்தளவிற்கு இவரின் புகழ் ஓங்கியிருந்தது. திருத்தந்தையர்களுக்கு ஆலோசகர் மட்டுமல்ல, இரண்டாவது சிலுவைப்போருக்கு கிறிஸ்தவர்களை தயாரித்த மாமறைப்போதகர் மற்றும், விசுவாசத்தின் காவலர். அவர்கள் சொல்வதையெல்லாம் கேளுங்கள் ஆனால் அவர்கள் வாழ்வது போல் ஆடம்பரமாக வாழாதீர்கள் என்றும் பணிபுரிய உங்களை தாழ்த்துங்கள் என இன்று நம்மையும் அழைக்கிறார். இந்த அழைப்பை அதற்கேற்ற பலன்தர வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு:**

1. தாயும் தந்தையுமான இறைவா, எமக்கு இப்போது நீர் கொடுத்துள்ள திருத்தந்தை திருஅவையின் பல தவறுகளுக்கு வருந்தி இறை இரக்கச் செயல்களை செய்யச் சொல்லியுள்ளார். இதனை ஏற்று திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக்கொண்டு இறைப்பணி புரியும் எம் திருஅவை அனைத்து பணியாளர்களையும் நீர் உம் திருக்கரங்களால் தாங்கி அவர்களுக்கு துணையாக பலமாக இருந்து ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பிள்ளைகளிடம் பேசுவதுபோல் எங்களிடம் இறைவார்த்தை வழியாக பேசும் ஆண்டவரே, நம்பிக்கையின் மக்களாகிய நாங்கள் உமது அறிவுரைக்கு செவிசாய்த்து, எல்லா மக்களையும் உமது அருகில் கொண்டுவந்து சேர்த்து உமது பிள்ளைகளாக உம்மிடம் ஒப்படைக்க தளர்ந்து போகாமல் யாரும் புறம்பே தள்ளப்படாமல் நீர் அணைத்துக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மகிமையும் மாட்சிமையும் நிறைந்த இறைவா, எங்கள் மறைமாவட்டங்கள், மறைவட்டங்கள், பங்குகள், குடும்பங்களில் அருகில் உள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து எல்லா மக்களையும் உம்மிடம் கூட்டிச் சேர்க்கும் பணியை மேற்கொள்ளவும் உமதருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நானே வழியும் உண்மையும் வாழ்வும் என்ற இறைவா, உமது நற்செய்தி பணிபுரியும் பணியாளர்களாகிய அனைவரும் உமது அன்பிலே வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டிய அனைத்து வரங்களையும் தந்து உதவிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 21.08.2015 ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறு — திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

**"முதிர்ந்த நெல்லிக்கனியும் மூத்தோர் சொல்லும் முதலில் கசக்கும் பின் இனிக்கும்."**

இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய வாசகங்களும் நற்செய்தியும் நமக்கு இதை எடுத்துரைக்கின்றது. மேற்கூறிய இந்த பழமொழி நமக்கு மிகமிக அவசியமானது திருநூலில் உள்ள இறைவார்த்தைகள். குடும்பத்தில் பெற்றோர் மற்றும் முதியோர் கூறும் அறிவுரைகள், திருஅவை, மற்றும் திருத்தந்தையின் மடல்கள், போதனைகள், கட்டளைகள் நமக்கு முதலில் கசப்பாக கடினமாகத்தான் இருக்கும். ஆனால் இவைகளை ஏற்று செயல்பட்டால் நாம் புறம்பே தள்ளப்படாமல் இறைவாக்குக்கு ஏற்புடைய பிள்ளைகளாய் இருப்போம். அதற்கேற்ற உறுதியையும், மனதிடத்தையும், மாட்சியையும், மகிமையையும் இறைவன் நமக்குத் தருவார். உதறித் தள்ளாமலம் உறுதியோடு ஏற்போம். இணைந்து செபிப்போம், பலன் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவற சபையினர் அனைவரும் புனித பென்னார்து கடைபிடித்த அதே துறவு ஒழுங்கு கட்டளைகளை கடைபிடித்து, பணிபுரியவும், இந்த உலகிற்கு எடுத்துக்காட்டாக முன்மாதிரியாக வாழ வேண்டிய வரங்களை வழங்கி ஆசீர்வதிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, இந்த இறை இரக்க ஆண்டில் நாங்கள் எடுக்கின்ற ஒவ்வொரு இரக்கச் செயல்களும் உமக்கு விருப்பமுள்ளதாக அமைய வேண்டும் என்றும் பெயரளவிலும், ஆடம்பரத்திலும், யார் யாருக்கு எந்தெந்த நேரத்தில், விதத்தில் உதவிகள் தேவையோ அவற்றை செய்ய எங்களுக்கு உதவும். எங்கள் கரங்கள், கால்கள், வாயின் வார்ர்தைகள் உமதாக மாறட்டும். எங்கள் மன்றாட்டை கேட்டு எங்களை அசீர்வதியும்.

3. புனித பென்னார்து போல இருபால் துறவற சபைகளை தேர்ந்தெடுத்த இறைவா, அவரைப்போல வாழவும், திருஅவைக்கும், மக்களுக்கும் அவ்வப்போது தேவையான நல் ஆலோசனைகளை வழங்கி எம் திருஅவை மறுமலர்ச்சியும் மேன்மையும் பெற்று இவ்வுலகிற்குத் தேவையான அனைத்து பணிகளைப் புரிய ஆற்றலையும், வல்லமையும் தந்து வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

## 22.08.2016 அரசியான தூய கன்னி மரியாள் திருப்பலி

**திருமதி. ராணி சம்பந்தன்**

**முன்னுரை**

இறையன்பில் வாழும் அன்பு உள்ளங்களே, இன்றைய தினம் நம் அரசியான அன்னையின் தினம். நம் தந்தையாகிய ஆண்டவரின் சிந்தனையில் உதித்த மங்கையற்கரசி நம் தூய கன்னிமரியாள். நமது திருத்தந்தை 12ம் பத்திநாதர் அன்னையின் மகத்துவத்தை பூலோகம் உணர 11.10.1956ல் இவ்விழாவை ஏற்படுத்தினார். நமது விவிலியத்திலும் இவ்விசுவாச கொள்கைக்கு ஆதாரங்கள் உண்டு. அன்னைமரி பெற்றெடுத்தவரும், நம்மை மீட்ட இரட்சகருமான இயேசு கிறிஸ்து ஆண்டவரும், அரசருமானவர். நம் அன்னை மீட்பு களத்தில் அவருடன் ஒத்துழைத்தவர். மாசற்ற இருதயத்துடன் தன் மகனை அர்ப்பணித்தவர். அதனால் தான் இம்மாதத்தை மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்த மாதமாக சிறப்பிக்கின்றோம். தன் மகனையே கையளித்ததுமல்லாமல், மானிட சந்ததி அனைவருக்கும் செபித்து அனைவரும் இறையரசுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியாக செபமாலை என்னும் புனிதமான மாலையை நம் கையில் கொடுத்து நம் அனைவரையும் தூய்மையின் மக்களாக வாழ வரம் தந்து தன் நேசமகனின் அனைத்து செயல்களிலும் துணையாக நின்ற மகாசக்தி அவர். அவரின் அருட்துணை வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பாசமிகு இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் உமது பாசவலை விரித்து அருள்புரியவும், உலகியல் தர்மங்களை கடைப்பிடித்தாலும் பரிசுத்த மக்களாக மோட்ச வாழ்வினை அடையவும், இறையாட்சி மலரவும் அரசியான நம் தாய் கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கம் நிறைந்த இறைவா, அபாயம் நிறைந்த இவ்வையகத்தில் பலவித தாக்கங்களால் அல்லல்பட்டுக் கொண்டு வாழ வழிவகை தெரியாமல் தவிக்கும் பல ஏழை மக்களுக்கு இரக்கம் கூர்ந்து, வாழ தகுந்த வழிகளை அவருக்குள் ஒளிர செய்ய வேண்டி அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. பேரரசரே இறைவா, மக்கள் குரல் கேட்டு, மாநகரத்தில் மக்கள் சிறப்புற வாழ பல நல்ல திட்டங்களை செயல்படுத்தும் பேரரசனை போன்று நன்மையான நல உதவிகளை செய்து நாட்டை மேம்படுத்தும் நாட்டு தலைவர்களை உருவாக்க வேண்டி அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவர்க்கெல்லாம் மருத்துவரே இறைவா, மருத்துவ வசதி இல்லா இடங்களில் உம் துணை ஒன்றையே நாடி நலிந்துகொண்டிருக்கும் நோயால் வாடிக்கொண்டிருக்கும் எளிய மக்களை உம் கரம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் நலம்பெற அரசியான தூய கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 24.08.2016 புனித பர்த்தலமேயு (நத்தானியேல்) திருப்பலி

திரு. விக்டர்

**முன்னுரை**

"இவர் உண்மையான இஸ்ரயேலர் கபடற்றவர்" (யோவா1:47) என்று இயேசுவால் பராட்டப்பட்ட நத்தனியேல் என்கிற பார்த்தலமேயு அப்போஸ்தலரின் திருவிழாவினை இன்று கொண்டாடுகிறோம். இவரது குடும்ப வரலாறோ அல்லது இவரது இளமைக்கால வாழ்வின் விபரங்களோ தெளிவாகக் கிடைக்கவில்லை. "கானா"வில் வாழ்ந்தவர் என்பதும் 7பேர் கொண்ட குடும்பத்தில் கடைசி மகனாக பிறந்தவர் என்பதும் திருமணமாகாதவர் என்பதும் இவரைப்பற்றிய பல்வேறு குறிப்புகளிலிருந்து அறியப்படுகிறது. இவர் ஒரு சிறந்த இறையியலர் என்றும், கவிஞர், சிறந்த நகைச்சுவையாளர் என்பதும் அறிய முடிகிறது. 12 அப்போஸ்தலர்களில் இவரும் யூதாஸ் ஸ்காரியூத் மட்டுமே சிறந்த கல்வியறிவு உடையவர்கள் என்று அறியப்படுகிறது. மற்ற அப்போஸ்தலரின் குடும்பங்களின் தேவைகளை நிறைவுசெய்து ஏற்ற நேரங்களில் அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து வந்துள்ளார்.

இயேசு உயிர்த்து விண்ணகம் சென்றபின்பு மற்ற அப்போஸ்தலரைப்போல இவரும் புதிய இடங்களில் நற்செய்தி அறிவிக்களானார். ஆர்மீனியா நாட்டிலும் இந்தியாவிலும் இவர் நற்செய்தி அறிவித்துள்ளார். அநேகர் இவரால் இயேசுவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராயினர். ஆர்மீனிய நாட்டு மன்னன் வணங்கிய சிலையிலிருந்த பிசாசை இவர் விரட்டி அடித்தார். கொடிய வியாதியால் மரணப்படுக்கையில் இருந்த மன்னனின் மகனை இயேசுவின் பெயரால் சுகப்படுத்தினார். இதனால் அம்மன்னன் இயேசுவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவரானார். இதைக்கண்டு பொறாமை கொண்ட மன்னனின் மூத்த சகோதரன் புனிதரை சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தினான். இறுதியில் இவரது தோலை உரித்து சிலுவையில் தலைகீழாக அறைந்து கொன்றான். இப்படி இவர் இயேசுவுக்காக இரத்த சாட்சியானார். புனிதரின் விழாவை சிறப்பிக்கும் நாம், நற்செய்தி அறிவிப்புப் பணியில் புனிதரைப் பின்பற்றி துணிவுடன் செயல்பட இறைவனிடம் வரம் வேண்டி மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, புனித பர்த்தலமேயு போன்றவர்கள் கட்டிக்காத்த திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளை ஆசீர்வதியும். ஆண்டவருக்கு ஏற்ற சாட்சிகளை உருவாக்கும் பணியில் இவர்கள் திறம்பட செயல்படவும் பரிசுத்த ஆவியானவர் இவர்களை எந்நாளும் வழிநடத்திடவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களை அதிகமாக நேசிக்கும் ஆண்டவரே, புனித பர்த்தலமேயுவின் விழாவினை சிறப்பிக்கும் நாங்கள் அவரைப்போல கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்திட துணிவும், திடமும், பரிசுத்த ஆவியாரின் துணையும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்லவர்களை பாராட்டும் இறைவா, "இதோ உண்மையான இஸ்ராயேலன் கபடற்றவன்" என்று புனித பார்த்தலமேயுவை பாராட்டினதுபோல எங்களது வாழ்விலும், சொல்லிலும், செயலிலும் நாங்கள் முயற்சி செய்து செயல்படுத்துகின்ற ஒவ்வொரு பணியிலும் ஆண்டவர் இயேசுவால் பாராட்டப்படுகின்ற வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்களை ஆளுகை செய்யும் ஆண்டவரே, சிறந்த கல்வியாளராக, இறையியலராக, கவிஞராக, நகைச்சுவையாளராக, நேர்மையாளராக, உண்மையுள்ளவராக, மற்றவர்களுக்கு உதவி செய்பவராக வாழ்ந்த புனித பர்த்தலமேயுவைப்போல நாங்களும் எங்கள் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளும் எம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் சிறந்து விளங்கிட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 27.08.2016 தூய மோனிக்கம்மாள் திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

"மகனே, எனது உடலை எங்கே வேண்டுமானாலும் அடக்கம் செய்யலாம், ஆனால் ஒன்று மட்டும் கேட்கிறேன், நீர் எங்கேயிருந்தாலும் ஆண்டவரின் பீடத்தில் என்னை நினைவு கூர்ந்தால் போதும்" என்று தன் மகனிடம் தன்

விருப்பத்தைக் கேட்டுக்கொண்ட புனித மோனிக்கம்மாள் கிறிஸ்துவ அன்னையருக்கும் குடும்பத் தலைவிகளுக்கும், விதவைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டு. இவர் பட்ரிசியஸ் அவ்ரிலியுஸை மணமுடித்தாள். கணவன் கடும் கோபம் படைத்தவர். அவரால் வந்த இக்கட்டுகளையெல்லாம் புனித மோனிக்கம்மாள் பொறுமையுடன் சகித்துக்கொண்டாள். இவளது நல்வாழ்வும், சாந்த குணமும் இவளுடைய கணவனின் குணத்தை மாற்றியது. இறுதியில் இவளின் கணவரும், மாமியும் திருமுழுக்குப்பெற்று திருச்சபையின் மக்களாக சேர்ந்து பின்பு மரித்து போயினர்.

மகன் அகுஸ்தின் இவளுக்கு பெரும் சிலுவையாக இருந்தார். தன் மகன் எப்படியாவது மனம் திரும்ப வேண்டும் என்னும் தேவையினால் ஆயர் அம்புரோசியாரை அடிக்கடி அணுகி கண்ணீருடன் தன்னுடைய மகன் அகுஸ்தினை இறைவன் தொட வேண்டுமென்று வேண்டிக்கொள்ள கெஞ்சுவார். செல்லும் ஆலயங்களில் எல்லாம் தன் மகனுக்காக கண்ணீர் விட்டு செபிப்பாள். அகுஸ்தின் தனது 32ம் வயதில் மனமாற்றமடைந்து கிறிஸ்தவராகி, குருவாகி பின்னர் ஆயர் ஆனார் என்றால் அந்த அருள் தாய் மோனிக்கம்மாளின் செபத்தின் விளைவே ஆகும். இத்திருப்பலியில் தங்களின் மக்களின் உடலைவிட ஆன்மாவை அதிகமாக நேசிக்கும் தாய் உள்ளங்களை உலகில் உருவாக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையே இருப்பிடமான இறைவா, உமது பணியை தொடர்ந்து நிறைவேற்றும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் இருபால் துறவறத்தார் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையை தங்களின் செபத்தாலும், தவத்தாலும் வாழ்க்கை நெறிகளினாலும் இளைய சமுதாயத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருப்பதுடன் தங்களின் பணிக்கு இளைஞர்களையும், இளம்பெண்களையும் தேவ அழைத்தலுக்கு உற்சாகப்படுத்தும் முயற்சியை இவர்கள் தொடர்ந்து செய்யும்படி தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்லாயனாம் இறைவா, சிற்றின்பத்தின் அழிவுப்பாதையில் சென்றுக்கொண்டிருக்கும் மக்களை உமது கோலும், கழியும் நல்லதொரு பாதையில் கொண்டுச் சென்று அழியாத தூய்மையான வாழ்வை என்றும் மேற்கொண்டு இறுதியில் இறைவனை அடைய ஆயனே இறைவா எம்மோடு நீர் தங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, உம்முடைய பிரதிநிதிகளாக விளங்கும் பெற்றோர்கள் தங்கள் குழந்தை செல்வங்களை இறைபக்தியில் வளர்க்கவும், வழிமாறி செல்லும் பிள்ளைகளை தங்களின் முன்மாதிரியான வாழ்வின் வழியாகவும், செபத்தாலும், தவத்தாலும் வழிநடத்த புனித மோனிக்கம்மாவைப்போன்ற பொறுமையான உள்ளத்தை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.08.2016 ஆண்டின் 22ம் ஞாயிறு — திருப்பலி

திரு. DVR. ராஜா

**முன்னுரை**

இறை இயேசுவின் இனிய சகோதர சகோதரிகளே, இன்றைய திருப்பலியின் முதல் வாசகம் தாய் தந்தையரை மதித்து நடக்க நம்மை அழைக்கிறது. தாயை துன்புறுத்துபவன் சபிக்கப்பட்டவன் என்றும், இறுமனம் உள்ளவன் இறைவனுக்கு ஏற்புடையவன் அல்ல என்று கூறுகிறது. இரண்டாம் வாசகம் ஆபேலின் இரத்தத்தைப் பார்க்கிலும் பரிசுத்த இரத்தம் சிந்திய எருசலேமின் தேவன் இயேசுவின் பக்கம் மக்கள் திரும்பி வரவும், அவருடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவும் அழைக்கிறது. நற்செய்தியிலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உவமையில் பந்தியில் கடைசி இடத்தை தேர்ந்துக்கொள்ளுங்கள் அப்பொழுது தான் வீட்டுத்தலைவர் காணும்போது உங்களை அதைக் காட்டிலும் மேன்மையான இடத்தில் அமரச் செய்து உயர்த்துவார் என்கிறார். எனவே இறைமக்களாகிய நாம் இறை இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அதன் வழி நடந்து நமது கஷ்டங்களிலும் வேதனைகளிலும், துன்ப நேரங்களிலும் ஆறுதலுக்காக மக்களை நாடாது இறைவனை நாடவும் வீண்பெருமை, கௌரவம் இவற்றைக் களைந்து தன்னை முற்றிலும் இறைவனுக்கு தாழ்த்தும்பொழுது இறைவன் ஏற்ற நேரத்தில் நமது இடர்பாடுகளிலிருந்து விடுவித்து உயர்த்துவார் என்ற உறுதியான நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபைக்காக மன்றாடுவோம், உன்னத தேவனே உமது பிரதிநிதியான திருத்தந்தையின் நலன்களை பாதுகாத்து திருச்சபையை சிறந்த முறையில் நிர்வகிக்கும் பேராற்றலை தொடர்ந்து நல்கிடவும், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் அனைவரும் தாங்கள் பெற்ற இறையழைத்தலுக்கு ஏற்புடையவராகவும்

இவர்களின் செயல்பாடுகளில் அன்பு, பரிவு, பொறுமை இவைகளை வெளிப்படுத்தும் கிறிஸ்துவின் சாயலாய் விளங்கிடவும், இவர்களின் உடல் உள்ள நலனையும், குடும்பங்களையும் இறைவன்தாமே பாதுகாத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பங்கிற்காக மன்றாடுவோம், பரிசுத்த தேவனே எம் பங்கு மக்கள் இன்றைய வாசகத்திற்கும் நற்செய்திக்கும் ஏற்ப இறைவனின் வார்த்தைக்குச் செவி கொடுக்கும் மக்களாய் விளங்கி நலிந்தோருக்கும் எளியோருக்கும் தங்களால் ஆன உதவியை செய்திட தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளைஞர் இளம்பெண்களுக்காக மன்றாடுவோம், பெற்றோர்க்கு கீழ்ப்படியும் பிள்ளைகளாய் இன்றைய இளையோர் விளங்கிடவும், திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் தங்களால் ஆன பங்களிப்பை நல்கிடவும், வேண்டிய அருளையும் ஆசீரையும் ஆற்றலையும் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 29.08.2016 திருமுழுக்கு யோவானின் பாடுகள் திருப்பலி

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

புனிதர்கள் பலருடைய உத்தம மாதிரிகைகளை கண்ணுற்றுப் பார்த்தால் நாம் செய்வது சொற்பமென்றும் ஏறக்குறைய பூஜ்ஜியமென்றும் அறிவோம். இன்றைய நாளில் திருமுழுக்கு யோவானின் பாடுகளை தியானிக்க நாம் அழைக்கப் பெற்றுள்ளோம். ஸ்நாபக அருளப்பர் என்றும் அழைக்கப்படும் இவர் செக்கரியா, எலிசபெத் என்ற வயது முதிர்ந்த பெற்றோர்க்கு மகனாக பிறந்தார். தன் வாலிப வயதில் இயேசுவின் வருகைக்காக மக்களை ஆயத்தப்படுத்தி அவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்து வந்தார். இதன் காரணமாக அரசர்கள், மதத் தலைவர்கள், பரிசேயர் இவர்களின் எதிர்ப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளானார்.

ஒட்டக முடியாலான ஆடையை அணிந்து, தோல்கச்சையை இடையில் கட்டி, வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் உண்டு பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார். இத்தகைய வாழ்வு எவ்வளவு துன்பகரமானது என்பதை நம்மால் உணர முடியாது. குருநில மன்னன் ஏரோது தன் சகோதரரான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொள்வது முறையற்ற செயல் என்று தைரியமாக குற்றம் சுமத்தியதால் சிறையில் அடைக்கப்பட்டார். வஞ்சகமாக கொல்லப்பட்டார். இப்பேர்பட்ட மறைசாட்சிகள் இரத்தத்தால் வளர்ந்துள்ள நம் கத்தோலிக்க திருச்சபையை நம் செபத்தாலும், தபத்தாலும் உண்மையான தூய ஊழியத்தினாலும் காக்க உறுதி கொண்டு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் அனைவரும் திருமுழுக்கு யோவானை தங்கள் முன்மாதிரியாக கொண்டு இறை ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணிக்க உமதருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, அருட்கன்னியர்கள், துறவறத்தார், இறைவாக்குப் பணியாளர்கள் தன்னார்வ தொண்டர்கள் அனைவரும் உலகைச் சார்ந்த ஆசாபாசங்கள், உடல் இச்சைகள் மற்றும் தீயோனின் சோதனைகளை வெல்ல தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு இறைவார்த்தையில் வழிநடத்தப்பட உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு தந்தையே, எங்கள் நாட்டையும் உலக நாடுகளையும் ஆள்பவர்கள் நீதி, நேர்மை, ஒழுக்கம், மனித நேயம் இவற்றை மதிக்கும் நல்ல உள்ளம் படைத்தவர்களாக தங்கள் மக்களின் நலம் கருதி தங்கள் பணியினை செய்யும் நல்ல இதயம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணைக் கடலே, கத்தோலிக்க திருச்சபையின் குடும்பங்கள் அனைத்தும் செக்கரியா எலிசபெத் குடும்பத்தைப்போல் இயேசுவுக்காக அனைத்தையும் கையளிக்கின்ற தியாக உள்ளம் வேண்டி இறைவா உம்மை வேண்டுகிறோம்.

## பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

### தூய மோனிக்கம்மாள்-தூய அகுஸ்தின்
### தாயும் சேயும் நமக்குத் தரும் பாடங்கள்

திருமதி. டிலைலா சேவியர்

தூய மோனிக்கம்மாள் தன்னுடைய குடும்பத்தில் தன் கணவன் கடுமையான கோபம் உள்ளவராக இருந்தபோதிலும் எதிர்வாதமாக நடந்துக்கொள்ளாமல் பொறுமையோடும், தாழ்ச்சியோடும், செபத்தினாலும் தன் கணவரை கவனித்ததால் தன் கணவனின் பிறவி குணங்களை மாற்றும் ஆற்றலை பெற்றிருந்தாள். தன் கணவர் இறப்பிற்கு முன் திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் மகனாக மாற்றும் வல்லமையையும் பெற்றிருந்தார். எனவே குடும்ப பெண்களுக்கு குடும்பத்தையும், குடும்ப அங்கத்தினர்களையும் ஆக்கப்பூர்வமாக இறைவழியில் நடத்தவும் நல்ல வாழ்க்கை வாழவும் அன்பு, பொறுமை, தியாகம் போன்ற எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்தார். முக்கியமாக இறைப்பற்று, ஆழ்ந்த விசுவாசம், இடைவிடாமல் செபித்தல் போன்ற பண்புகளை நாம் பெற்றிருக்க வேண்டுமென்ற பாடத்தை இப்புனிதை மோனிக்காவிடம் கற்றுக்கொள்வோம்.

மேலும் இன்றைய காலக்கட்டத்தில் இளைஞர், இளம் பெண்களை நல்ல நெறியில் வளர்க்க துடிக்கும் பெற்றோர்களுக்கு இவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. ஓராண்டு, இரண்டாண்டு அல்ல தன்னுடைய மகனின் புனித வாழ்விற்காக மகனின் 32வது வயதுவரை இடைவிடாமல் கண்ணீரோடு இறைவனிடம் மன்றாடி கேட்கும் நம்பிக்கையான விடாமுயற்சியை நாம் கற்றுக்கொள்ள இவரது வாழ்க்கை நமக்கு கற்பிக்கிறது. இதுமட்டுமல்லாமல் புனித மோனிக்கம்மாள் தன்னுடைய மகனின் ஆடம்பர வாழ்க்கை ஆன்மாவிற்கும், அதனால் இறைவனிடமிருந்தும், இறை அன்பிலிருந்தும் விலகியிருப்பதை விரும்பவில்லை. எனவே தன் மகனுக்காக செபிக்கும்படியும், நல்வழியை காட்டும்படியும் துறவற மக்களின் உதவியை நாடி செல்கிறாா். எனவே பெற்றோர்களாகிய நாமும் நம்முடைய பிள்ளைகளுக்காக பிறரின் செபமும், குருக்கள், கன்னியர்களின், ஆலோசனைகள் மிகவும் அவசியம் என்பதையும் தன்னுடைய வாழ்வின் மூலமாக நமக்கு கற்றுத்தருகிறார்.

தூய மோனிக்கம்மாள் தன் மகனை நல்வழிபடுத்துவதற்காக இறைவனையும், அன்னை மரியாளையும் உறுதியாக பற்றிக் கொண்டாள். உருக்கமான மன்றாட்டுக்களால் இவர்களின் உதவியையும், அருளையும் பெற்று தன் குடும்பத்திலுள்ள தன் கணவர், மாமியார் முக்கியமாக தன் மகனை ஆயர் அளவிற்கு உயர்த்தினார். எனவே பெற்றோர்களாகிய நாமும் நாம் எந்த நிலையில் இருந்தாலும் ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் நம்முடைய பிள்ளைகளையும் குடும்ப அங்கத்தினரையும் தூய்மையான இறைவனுக்கு பிரியமான வாழ்க்கையை வாழ கற்றுக்கொடுக்கவும், பிள்ளைகள் தடுமாறும்போது எத்தனை காலமானாலும் செபிக்க வேண்டுமென்றும், நல்லதொரு எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ வேண்டுமென்ற பாடங்களையும், பிள்ளைகளுக்கு உடலைவிட ஆன்மா முக்கியமானதென்றும், ஆன்மா இறைவனுக்கு சொந்தம் என்ற உண்மையையும் தன் மகன் அகுஸ்தீன் வழியாக எப்படி தன் மகனின் ஆன்மாவை சாத்தானுக்கு சொந்தமாக்காமல் பாதுகாத்தாரோ அவ்வாறே நாமும் பாதுகாக்க வேண்டுமென்ற பாடத்தையும் நமக்கு கற்றுத் தருகிறாள்.

**தூய அகுஸ்தினார் நமக்கு தரும் பாடங்கள்**

உன் வாழ்க்கையில் நீ புரியும் செயல்களுக்கு நீயே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், நீ புரியும் செயல்களுக்கு அலகையோ, அடுத்தவர்களோ பொறுப்பல்ல. எனவே கண்ணியமாக நடந்து உமது ஆன்மாவை இறை உதவியுடன் மீட்டுக்கொள் என்பதே தூய அகுஸ்தின் உலக மக்களுக்குக் கற்றுத்தரும் பாடம். மேலும் உமது கைவேலையாகிய அழகிய படைப்புகளிடமே என் மனதை பறிக்கொடுத்தேன். "நீர் என்னுள் இருக்க நான் உம்மோடு இல்லாதிருந்தேன் நீர் என்னை அழைத்தீர் என் செவிகளைத் துளைத்தது உமது பேரொளி என் இருள்நிறைந்த கண்களுக்கு ஒளி கொடுத்தது. நீர் தந்த அன்பிற்கும் அமைதிக்கும் உம்மில் உருகி நிற்கிறேன்" என்று கூறிய இளைய சமுதாயத்தினரை தகுந்த நேரத்தில் இறை அழைத்தலை உணர நமக்கு பாடம் கற்றுத்தருகிறார்.

தேவையில்லாத தப்பறையான புத்தகங்களை படிப்பதைவிட வேதாகம புத்தகங்களை படிக்கும்போது இறைவனின் விருப்பத்தை புரிந்துக்கொள்வோம் என்றும், நாம் வழிதவறி செல்லும்போது, நம்மைவிட பெரியவர் வாழ்வில் அனுபவம் உள்ளவர்கள், துறவறத்தார் போன்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டுமென்ற பாடத்தை கற்றுத்தருகிறார். கற்பு என்னும் புண்ணியத்தை இருபாலரும் கடைபிடிக்க வேண்டுமென்றும் தாயின் மென்மையான உள்ளத்தையும், தாயின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றும், தாயின் செபங்கள், கண்ணீர், ஆலோசனைகள் என்றும் பிள்ளைகளின் நல்வாழ்விற்காக எண்ணங்களையும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று பாடத்தையும் கற்றுத்தருகிறார்.

செபம்: இறைவா, தங்களின் மக்களின் உடலைவிட ஆன்மாவை அதிகமாக நேசிக்கும் தாய்மாரை உலகுக்குத் தாரும்.

# தூய தொன் போஸ்கோவின் வாழ்வில், பணியில் இறை இரக்கம்

திரு. ஜான் அலெக்ஸ்

தொன் போஸ்கோவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். தொன் போஸ்கோ அருளிய பக்திகள் என்று சொன்னாலே நற்கருணை பக்தி, மரியன்னை பக்தி மற்றும் திருத்தந்தை பக்தி என்பது நமக்கு நன்றாக தெரியும். இவை மட்டுமன்றி தன் இதயத்திற்கு மிக நெருக்கமான இன்னொரு பக்தியையும் பரவச் செய்தார். அதுதான் இறை இரக்கத்தின் பக்தி. சிலருக்கு இது ஆச்சரியமாக தோன்றலாம். ஆனால் இது உண்மை.

**1. இரக்கத்தின் கடவுள்**

தம் மென்மையான அன்பினால் நம் அனைவரின் இதயங்களையும் ஆட்கொள்ளும் இறைவனின் தாராள இரக்கமே தூய தொன் போஸ்கோ வாழ்ந்த அருள் வாழ்வின் மையம். இறைவனின் அருளிரக்கம் உண்மையான மனமாற்றம் உள்ள இதயங்களில் பொங்கி நிறைகின்றது என்பதை தொன் போஸ்கோ, பாதை தடுமாறிக் கொண்டிருந்த இளையோர்களுக்கும் பேரிடர்களில் சிக்கிக் கொண்ட மாணவர்களுக்கும் பணியாற்றியதன் வழியாக பெற்ற அனுபவங்களிலிருந்து கண்டு கொண்ட உண்மையாகும். 1847ல் மார்சியோனஸ் பரோலாவின் வேண்டுகோளுக்கு இணங்க தொன் போஸ்கோ எழுதிய "இறை இரக்க பக்தி முயற்சி" என்ற நூலில் எவ்வாறு நம் இறைவன் அன்பும் அருளும் உள்ளவர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இன்று இப்போது நாம் உயிருடன் உலவுவது கடவுளின் அன்பு ஒன்றைத்தவிர வேறு எதைக் காரணமாகக் காட்ட முடியும் என்கிறார் தூய தொன் போஸ்கோ. இவ்வுலக வாழ்விற்கு இறைவன் தந்திருக்கும் நன்மைகள் ஏராளமானது என்றும் விண்ணக வாழ்விற்கு அவர் வகுத்திருக்கும் திட்டங்கள் எவ்வளவு என்று நாம் கணக்கிட முடியுமா என்றும் கேள்வி எழுப்புகிறார் நம் தொன் போஸ்கோ. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமாயின் அனைத்திற்கும் அடிப்படையான "ஆன்மா"வை தந்திருப்பது கடவுள் மனிதனுக்கு தந்துள்ள கருணையின் கொடையாகும். தன்னுடைய இரக்கத்திற்கு பிரதிபலனாக இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது, பாவத்தைவிட்டு அவரின் அன்பில் சரணடைவது ஒன்று மட்டுமே.

**2. ஒப்புரவு அருளடையாளம் - இறை இரக்கத்திற்கு வழிவகுக்கும் உன்னத கொடை**

புனிதமும் இரக்கமும் நிறைந்த திருஅவையில்தான் நாம் மீட்புப் பெறுதவற்கான அனைத்து வழிமுறைகளும் உள்ளன. நம்பிக்கையும் அன்பும் எதிர்நோக்கும் கொண்டு தங்களின் வாழ்வை, தொடர் செபம், அடிக்கடி அருளடையாளங்களை அணுகுதல் போன்றவற்றுக்கு ஒப்புக்கொடுத்து, இளையோரும் பெரியோரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் திருஅவையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று தொன் போஸ்கோ அடிக்கடி கூறிவார். அதுமட்டுமல்ல இறை இரக்கத்தின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருத்தல் பாவத்துள் மிக கொடிய பாவமாகிறது என்பார். இறைவனின் இரக்க குணத்தைப் பற்றி பேசிய தொன் போஸ்கோ அதே இறைவனை ஒரு கடுமையான நீதிபதியாக தனது மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் தவறியதில்லை.

**3. இறை இரக்கத்தின் பக்தியை பரப்புவதில் தொன் போஸ்கோவின் பங்கு**

இறை இரக்கத்தின் மீது ஆழமான விசுவாசியான தொன் போஸ்கோ, அனைவரையும் இறை இரக்கத்தில் விசுவாசம் கொள்ள தூண்டுகோளாக வாழ்ந்தார். தான் குருவாக திருநிலைப்படுத்தபட்டது முதல் தூரின் நகரில் உள்ள பல துறவற நிறுவனங்களில் இறை இரக்கத்திற்கான செபவழிபாட்டை நடத்தும் வழக்கத்தை ஏற்படுத்தினார். மேலும் அவர் கடவுளின் இரக்கத்தை போற்றும் கதைகளை இளையோருடன் குறிப்பாக பாவத்திலிருந்து விடுபட உறுதி கொண்டுள்ள இளையோருடன் பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். இறைமக்களும் இதை பெரிதும் வரவேற்றார்கள். இளையோரை நல்வழிபடுத்த அந்த காலத்திலேயே "பஞ்ச் டைலாக்" சொல்வதில் கில்லாடி நம் தொன் போஸ்கோ. அதிலும் குறிப்பாக கடவுளின் இரக்கத்தைப் பற்றி குறிப்பிடும்போது, "கடவுளின் இரக்கத்தை நிந்திப்போர் அவர் இரக்கத்தை பெறும் தகுதியை இழக்கின்றார்" என்று கூறுவார். தொன் போஸ்கோவின் திறமையை நன்கு உணர்ந்த அவரது நண்பர் சில்வியோ பெலிக்கோ என்பவரின் முயற்சியால், 1846ல் 111 பக்கங்கள் கொண்ட "இறை இரக்கத்தின் பக்தி வழிபாடு" என்ற புத்தகத்தை எழுதியது மட்டுமல்ல திருத்தந்தை 16ம் கிரகோரியார் இந்த பக்திக்கு பரிபூரண பலன் அருளி வாழ்த்தினார் என்பது வரலாறு.

**6. முடிவுரை**

நமக்காக எந்நேரமும் தயாராக காத்துக் கொண்டிருப்பவரே இரக்கத்தின் ஆண்டவர் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருப்பவர் தொன் போஸ்கோ. அதை தன் வாழ்வில் கடைபிடித்தும் பிறருக்கு இப்பக்தியை பரப்பியது மூலம் ஒரு நாள் எல்லோரையும் விண்ணக்தில் ஒன்று சேர்க்கும் என்பதில் தளராதிருந்தவர். அவரே சொல்லுவார், "இவ்வுலகில் நான் உங்களை விட்டுச் செல்கிறேன் ஆனால் சிறுது காலம் மட்டுமே. இறைவனது அளவற்ற இரக்கம் நம்மையெல்லாம் ஒரு நாள் விண்ணகத்தில் ஒன்றாக காணச்செய்யும். அங்கு நான் உங்களுக்காக காத்திருக்கிறேன்". ஆம் இறை இரக்கத்தின் திருத்தூதுவர் தொன் போஸ்கோ என்று சொன்னால் அது மிகையாகாது.

# தூய ஜான்மரி வியான்னி இறை இரக்கத்தின் கருவி

திரு. விக்டர்

"என்னுடைய இளம் வயதில், பாவம் என்றால் என்ன?" என்பதை அறியாதிருந்தேன். பாவ மன்னிப்பு கேட்கும் நேரத்தில் பாவிகளில் வாயிலிருந்து அவர்கள் தங்கள் பாவங்களை சொன்னபோதுதான் "எது பாவம்" என்பதை உணர்ந்தேன்" என்று கூறும் அருட்தந்தை ஜான் மரிய வியான்னி 1786ம் ஆண்டு மே 8ம் நாள் திரு. மாத்தியு வியான்னிக்கும் திருமதி. மேரி பெலிக் அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார்.

சிறு பருவம் முழுவதும் பிரெஞ்சு புரட்சி நடைபெற்ற காலத்தில் கழிந்தது. அக்காலத்தில் திருப்பலி நிறைவேற்றுவது புரட்சியாளர்களால் தடை செய்யப்பட்டிருந்தது. தடையை மீறுவது குற்றமாகக் கருதப்பட்டது. அப்படியே தடையை மீறி இரகசிய இடங்களில் திருப்பலி நிறைவேற்றும் குருக்கள் ஒவ்வொருவராக கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். சிறுவன் வியான்னியோ அப்படிப்பட்ட குருக்களை "Hero" வாக பார்த்தான். இவரது புதுநன்மை திருப்பலிக்கூட இரகசியமான அறையில் வைத்து நடத்தப்பட்டது. 1802ல் நெப்போலியன் போனபார்ட் பிரான்ஸ் நாட்டைக் கைப்பற்றிய பிறகுதான் நிலைமை மாறியது. அப்பொழுதுதான் வியான்னி அவர்கள் குருத்துவக் கல்லூரி சென்று படிக்கலானார். பிரெஞ்சு புரட்சியால் இவரது இளமைக் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டதால் குருமடத்தில் இவரால் திறமையாக கல்வி கற்க இயலவில்லை. ஆனாலும் பெரும் சிரமங்களுக்கிடையில் போராட்டத்தோடு 1805ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருப்பட்டம் பெற்றதும் பிரான்ஸ் நாட்டிலுள்ள ஆர்ஸ் (ARS) என்ற குக்கிராமத்தில் பங்கு தந்தையாகப் பொறுப்பேற்றார். பலரும் அறிந்திராத சுமார் 200பேர் மட்டுமே குடியிருக்கும் அந்த கிராமத்தில் தன் பணியைத் துவங்கினார். பிரெஞ்சு புரட்சி ஏற்படுத்தியிருந்த தாக்கத்தால் ஞாயிறு வழிபாடு குறித்த ஆர்வமின்றி, அதுகுறித்த கவலையுமின்றி ஆட்டம் பாட்டங்களிலும், களியாட்டங்களிலும் அக்கிராம மக்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து வந்தனர். "ஆயனில்லா ஆடுகளைப்போல் அவர்கள் அலைகழிக்கப்பட்டு ஆவிக்குரிய வாழ்வில் சேர்ந்து காணப்பட்டதால் (மத் 9:36) இயேசுவைப்போல் இவரும் அம்மக்கள்மேல் மனம் இறங்கினார். "தம் மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். (யோவா 3:16) என்ற இறைவாக்குக்கிணங்க அந்த கிராம மக்களை அன்பு செய்ய ஆரம்பித்தார்.

கைவிடப்பட்ட நிலையிலிருந்த அந்த கிராம மக்களுக்கு இறை இரக்கம் வேண்டிமுழந்தாள்படியிட்டு செபிக்க ஆரம்பித்தார். அதுவரை ஆலயத்தை எட்டிப்பார்க்காத மக்கள் ஒருவர் ஒருவராக வர ஆரம்பித்தனர். அப்படி அவர்கள் வந்து பார்த்தபொழுது எப்பொழுதும் அவரை செபிக்கிற நிலையிலேயே பார்த்தனர்.

காலைநேரத்தில் வந்து பார்த்தாலும் இவர் முழங்கால் படியிட்டு செபித்துக்கொண்டு இருந்தார். மத்தியான வேளையிலும் இவர் செபித்துக்கொண்டு இருந்தார். மாலை வேளையிலும் இவர் செபித்துக் கொண்டு இருந்தார். இரவு நேரங்களிலும் இவர் செபித்துக்கொண்டிருந்தார். இச்செயல் அந்த கிராம மக்களை இவர்பால் ஈர்க்கப்பட்டு, இயேசுவிடம் காணப்பட்ட செபவாழ்வு இவரிடத்திலும் காணப்பட்டது கண்டு மனம் மாறினார்.

தன்னிடம் வந்தவர்களிடம் அவர் பழகிய விதம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. அன்புடனும், கனிவுடனும், எளிமையாக ஒரு உண்மையான தந்தை போன்று, ஆச்சரியப்படத்தக்க செய்திகளோடு அளவிலா இயேசுவின் அன்பை அவர்களுடைய இதயங்களில் பதியவைத்து வழிநடத்தினார். "கடவுள் இயேசுவோடு இருந்ததால் எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்" (அப. 10:38) அதுபோல இவரும் மக்களை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்து இறை இயேசுவின் இரக்கத்தை அவர்கள் பெற்றிட காரணமானார். இயேசுவின்மீது இவர் கொண்டிருந்த அன்பும் அவரில் இணைந்திருந்த இவரது வாழ்வும் எதிர்பார்ப்புகளையும் எதிர்க்கத் துணிவில்லாதவர்களாக மாற்றியது. ஒரு குருவானவர் என்பவர் "மறுகிறிஸ்து" (Another Christ) என்பதை தன் வாழ்வில் செயல்படுத்திக் காட்டினார்.

"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்" (லூக் 6:36) என்கிற இறை வாக்கிற்கிணங்க தன்னிடம் பாவ சங்கீர்த்தனம் செய்ய வந்த மக்கள்மீது இரக்கம் கொள்ள ஆரம்பித்தார். இதனால் இவரது புகழ் மற்ற கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் பரவ ஆரம்பித்தது. இவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்வதற்காக பல ஊர்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் மக்கள் வர ஆரம்பித்தனர். இப்படி வந்தவர்கள் எண்ணிக்கை பெருக ஆரம்பித்தது. ஒரு நாளைக்கு சுமார் 12 மணி நேரமுதல் 16 மணிநேரம் வரையிலும் பாவசங்கீர்த்தனம் கேட்க ஆரம்பித்தார். நூற்றுக்கணக்கில் வந்தவர்கள் ஆயிரக்கணக்கில் கூட ஆரம்பித்தனர். பிரான்ஸ் நாட்டினர் மட்டுமல்லாமல் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து மக்கள் இவரைத் தேடி வர ஆரம்பித்தனர். அவர்களில்

சாதாரண மக்கள், அரசியல் தலைவர்கள், பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள், நாட்டில் உள்ள பிரபலங்கள், ஆயர்கள் என பலரும் அடங்குவர். இவரைச் சந்தித்து இவரது வார்த்தைகளைக் கேட்டு அனைவரும் புதுப்படைப்பாக மாறினர்.

கடவுளின் இரக்கச் செயலைச் செய்யும்போது அது ஆன்மீக இரக்கச் செயலாக இருந்தாலும் சமூக இரக்கச் செயலாக இருந்தாலும், ஒரு குருவானவர் அதை முன்னின்று செய்யும்போது அது சமூகத்தில் பெரிய தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும். இதை தன் வாழ்வில் செயல்படுத்திக் காட்டி தன்னைப் பின்பற்றிய மக்களும் இறை இரக்கச் செயல்களைச் செய்வதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

தனது வாழ்வின் ஒவ்வொரு செயல்களின் மூலமாகவும் தலைசிறந்த குருவாகவும், குருக்களுக்கெல்லாம் சிறந்த முன்மாதிரியாகவும் திகழ்ந்தார். இவரிடம் பாவ சங்கீர்த்தனம் செய்துகொண்ட லட்சக்கணக்கான மக்கள் மனம் மாறினார். இவரது புகழ் பிரான்ஸ் நாட்டில் மட்டுமல்ல ஐரோப்பாவின் நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்தது. இறைவனது இரக்கச் செயல்களுக்கு கருவியாய் இருந்த அருட்தந்தை. ஜான் மரிய வியான்னி அவர்கள் தன்னுடைய 73ம் வயதில் 1859ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் நாள் இறைவனடி சேர்ந்தார். 1925ம் ஆண்டு இவர் புனிதராக உயர்த்தப்பட்டு பங்கு தந்தையர்களின் பாதுகாவலராக திருச்சபையால் நியமிக்கப்பட்டார். திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவரை குருவானவர்கள் அனைவரின் பாதுகாவலராக அறிவித்தார்.

இவர் மறைந்த தினமான ஆகஸ்ட் 4ம் நாளில் கொண்டாடப்படுகின்ற இவரது நினைவு விழாவைக் கொண்டாடும் நாம் இவரைப்போல மறுகிறிஸ்துவாக வாழ்வதற்கு முயற்சி செய்வோம்.

## தூய மாக்சிமில்லியன் கோல்பே

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

"நான் உங்களிடம் அன்பு கூர்ந்திருந்ததுபோல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கூறவேண்டுமென்பதே எனது கட்டளை" (யோவா. 15:12) என்ற கூற்றிற்கேற்ப நமதாண்டவர் வாழ்ந்து காட்டினார். அவர் தன் உயிரையே பலியாக்கும் அளவிற்கு நம்மீது அன்பு கூர்ந்தார். நாம் பிறர்மீது செலுத்தும் அன்பு இப்படித்தான் இருக்க வேண்டுமென்று இக்கட்டளை மூலம் தெளிவாக்கினார். இன்னும் ஒருபடி உயர்ந்து "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்கிறார்.

இதற்கு உதாரணமாய் உயர்ந்தவர்தான் புனித மாக்சிமில்லியன் கோல்பே இவர் போலந்து நாட்டில் கன்ஸ்கவோலா என்ற இடத்தில் ஜீல்ஸ் கோல்பே, மரியா டப்ரோவ்ஸ்கா ஆகியோரின் இரண்டாவது மகனாக 1894 ஜனவரி 8ம் நாள் பிறந்தார். நெசவுத்தொழில் செய்து வாழ்ந்த ஏழைக்குடும்பம். இவரின் இயற்பெயர் ரேய்மண்ட். அண்ணன் பிரான்சிஸ் குருவாக விரும்பியதால் உயர்கல்வி படிக்கச் செய்தனர். ஆனால் புத்தகங்களை வாசிப்பது போன்ற திறமைகள் இருந்ததால், தானாகவே பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடிந்தது. மாக்சிமில்லியனுக்கு பத்து வயது இருக்கும்போது அன்னை மரியாளின் படத்தின்முன் மண்டியிட்டு செபித்துக்கொண்டிருந்த வேளை, வெள்ளை மற்றும் சிவப்பு நிற கிரீடங்களைக் கையில ஏந்தியவராய் அன்னை மரியா அவருக்கு காட்சி தந்தார். வெள்ளைக் கிரீடம் "நீ எப்போதும் தூய்மையில் நிலைத்திருப்பாய்" என்பதையும் சிவப்புக் கிரீடம் "நீ மறைசாட்சியாக இருப்பாய்" என்பதையும் குறிக்கிறது. இவ்விரண்டில் உனக்கு எது வேண்டுமென்று கேட்டார். அவரோ எவ்வித தயக்கமும் இல்லாமல் அன்னையே, இரண்டையும் எனக்குக் கொடும் என்றார்.

அண்ணன் பிரான்சிசும், மாக்சிமில்லியனும் உயர்கல்வி பொதுத்தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களாய், தாங்கள் ஆசைப்பட்டபடியே குருவானவர்களை பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தனர். அப்போது அவருக்கு வயது 16. அவர் துறவற சபையில் சேர்ந்தபோது, காசநோய் அவரைத் தொற்றிக்கொண்டது. ஆனாலும் அவரின் அறிவாற்றல் உரோமையில் உயர்கல்வி பயில வாய்ப்பினை அளித்தது. 1911ல் தற்காலிக வார்த்தைப்பாடும் 1914ல் நிரந்தர வார்த்தைப்பாடும் கொடுத்தார். 1915ல் மெய்யியலில் முனைவர் பட்டம் பெற்றார். அதுசமயம் அவரது வலக்கை பெருவிரலில் காயம்பட்டு ஆறாத நிலையில் லூர்து நகர் அன்னையின் தீர்த்தம் தடவிட, விரல் அற்புதமாக குணமடைந்தது.

அன்னைமரியாளின்மீது கொண்ட பற்றால், அன்னையின் சேனை (Malitha of Immaculate) என்ற அமைப்பை இவர் உருவாக்கி, நல்ல வாழ்வாலும், செபம், உழைப்பு, துன்பம் ஆகியவற்றால் தீமையை விரட்டி சான்று பகர்ந்து வாழச் செய்தார். அதோடு அன்னை மரியாளின் பாதுகாவலில் நற்செய்தியை உலகமெங்கும் பரப்பிட "அமலோற்பவ வீரர்"

(Knights of Immaculate) என்ற பத்திரிக்கையை 1922 ஜனவரி முதல் தேதியில் தொடங்கினார். இவ்வச்சகப் பணிக்கெனவே 700 பிரான்சிஸ்கன் சகோதரர்கள் சேர்ந்து பணிபுரிய "அமலோற்பவ நகரம்" (City of Immaculate) நகரத்தை நிறுவினார்.

உரோமையிலிருந்து போலந்து திரும்பியபின் 1939 செப்டம்பர் மாதத்தில் ஜெர்மானிய இனவெறியன் ஹிட்லர் போலந்தைத் தாக்கினான். நம் புனிதரின் கல்வாரிப் பயணம் அப்போது ஆரம்பித்தது. கண்ணில் கண்ட அனைவரையும் கொன்று குவித்தார்கள். பலரைக் கைது செய்தார்கள். நம் புனிதரையும் கைது செய்து "அம்டிக்ஸ்" என்ற சிறையில் அடைத்தார்கள். அவர் கையில் செபமாலை இருப்பதைக்கண்டு மிக அதிகமாக துன்புறுத்தினார்கள்.

சிறையில் கொடுமைகளைத் தாங்கதவனாய் கைதி ஒருவன் தப்பி ஓடிவிட்டான். ஆத்திரம் அடைந்த காவலன் அவன் பிடிபடும்வரை பத்து பத்துபேராக பட்டினிச் சிறையில் அடைப்பேன் என்று சொல்லி சிறையில் அடைத்தான். அப்போது அந்த பத்துபேரில் ஒருவனான செர்ஜென்ட் பிரான்சிஸ்செக் கானோனிக்லக் (Sergeant Franciszek Gajowuizek) என்ற இளைஞன் "என் குடும்பம் என்னாவது என் ஏழை மனைவி மக்களை இனி நான் பார்க்க முடியாதா?" என்று கதறி அழுதான். அதனைக் கண்டு மனம் பொறுக்காத மாக்சிமிலியன் அவனுக்குப் பதிலாக தான் பட்டினிச் சிறைக்குச் செல்வதாகக் கூறி சிறைக்குள் சென்றார்.

பசியின் கொடுமை சிறையிலிருந்தவர்களின் உயிரை எடுத்துக்கொண்டது. எஞ்சி இருந்தவர் நம் புனிதர் மட்டுமே. மரியன்னையின் விண்ணேற்பு விழாவிற்கு முந்தின நாள் 1941ஆகஸ்ட் 14ம் நாள் அவருக்கு கார்பரிக் ஆசிட் என்ற நச்சு ஊசியினைச் செலுத்திட, புன்னகைத் தவழ்ந்த மரணத்தை ஏற்றுக்கொண்டார். திருத்தந்தை ஆறாம் பவுல் 1971 அக்டோபர் 1976ல் அருளாளராக உயர்த்தினார். திருத்தந்தை யோவான் பவுல், 1982அக்டோபர் 10ம் நாளில் புனிதராக உயர்த்தினார். இவர் யாருக்காகத் தன் இன்னுயிரைத் தந்தாரோ, அவரே இவர் புனிதராவதற்குச் சாட்சி பகர்ந்தார் என்பது ஓர் புதுமை.

வேதசாட்சிகளாய் உயிரை விடுவோர் அநேகர். ஆனால் இன்னொருவருக்காக தன்னுயிரைக் கொடுத்து, அவரைக் காத்தது இவரின் தனிச்சிறப்பு. ஆம் நாமும் இப்புனிதரைப்போல் அப்போஸ்தலர் யோவான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்ததால் அன்பு இன்னதென்று அறிந்தோம். ஆகவே நம் சகோதரருக்காக நாம் உயிரைக் கொடுப்போம். (1யோவா 3:16) உயிரைக் கொடுக்கவில்லையென்றாலும், உறவைக் கொண்டாடிடும் நட்பினைக் கொள்வோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. வருகிற செப்டம்பர் 6ம் தேதி முதல் 11ம் தேதி வரை போர்ச்சுக்கல் நாட்டின் பாத்திமாவில் அன்னை மரியா காட்சி கொடுத்ததன் நூறாமாண்டு கொண்டாட்டங்களின் ஒரு நிகழ்வாக நடைபெற உள்ள உலக மரியாளின் மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்துவதற்குத் தனது சிறப்பு பிரதிநிதி புனிதர் நிலை திருப்பேராயத்தின் முன்னாள் தலைவர் கர்தினால் José Saraiva Martins அவர்களை பிரதிநிதியாக நியமித்துள்ளார் திருத்தந்தை.

2. போலந்து நாட்டின் கிராக்கோவில் நடைபெறவிருக்கும் உலக இளையோர் தினம் பற்றி பத்திரிக்கையாளர்களிடம் பேசிய அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர் பேரவையின் இளையோர் பணிக்குழுவின் தலைவர் ஆயர் Frank J. Caggiano அவர்கள், அந்நாட்டிலிருந்து ஏறத்தாழ முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட இளையோர் இதில் கலந்துகொள்வார்கள் என்று அறிவித்தார். கிராக்கோவில் ஜூலை மாதம் 26ம் தேதி முதல் 31ம் தேதி வரை 31வது உலக இளையோர் தினம் நடைபெறவிருக்கின்றது. இதில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் கலந்துகொள்வார்கள். இந்தியாவிலிருந்து ஏறக்குறைய 150 இளம் கத்தோலிக்கர், கிராக்கோவ் உலக இளையோர் தினத்தில் கலந்துக்கொள்வதற்குத் தயாராகி வருகின்றனர் என்று UCA செய்தி நிறுவனம் கூறியது.

3. 2015ம் ஆண்டில் 12 கோடியே 41 இலட்சம் யூரோக்களை திரட்ட முடிந்துள்ள திருஅவையின் Aid to the Church in Need என்ற உதவி அமைப்பு, 146 நாடுகளில் 6209 திட்டங்களுக்கு உதவியுள்ளது. மக்களின் தாராள உதவியுடன் கடந்த ஆண்டில், அதற்கு முந்தைய ஆண்டைவிட 600 திட்டங்கள் அதிகமாக நிறைவேற்ற முடிந்தது என அறிவிக்கிறது இந்த உதவி அமைப்பு.

4. துணிச்சலும், இரக்கமும் நிறைந்த அருள்பணியாளராக விளங்குங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசுவை அன்பு கூறுங்கள் என்றும், குருத்துவ பயிற்சிக்கு மனத்தாராளத்துடன் தங்களையே கையளிக்குமாறும், திருத்தந்தை ஸ்காட்லாந்து குருத்துவக் கல்லூரி மாணவர்களை கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

5. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருகிற ஆகஸ்ட் 4ம் தேதி, இத்தாலியின் அசிசிக்குத் திருப்பயணம் மேற்கொண்டு, "அசிசியின் மன்னிப்பு" என்ற நிகழ்வின் எட்டாம் நூற்றாண்டு நிறைவு நிகழ்வை Porziuncolaல் அதிகாரப்பூர்வமாக நிகழ்த்துவார் என பிரான்சிஸ்கன் சபையினர் அறிவித்துள்ளனர். 1216ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியன்று, இந்த சிறிய ஆலயத்திற்குள் புனித பிரான்சிஸ் அசிசியார் செபித்துக்கொண்டிருந்தபோது ஏராளமான வானதூதர்கள் படைசூழ கிறிஸ்துவையும், அன்னை மரியாவையும் காட்சியில் கண்டார். அப்போது புனிதர் தரையில் நெடுஞ்சாண்கிடையில் விழுந்தார். ஆண்டவர், அசிசியாரிடம், ஆன்மாக்களின் மீட்புக்காக என்ன வேண்டும் எனக் கேட்டார். அதற்கு அசிசியார், இந்த ஆலயத்தைத் தரிசிக்கும் அனைத்து திருப்பயணிகளின் அற்பப் பாவங்களை மன்னிக்கும் பரிபூரண பலனை நல்குமாறு கேட்டார். ஆண்டவரும், அச்சமயத்தில் திருத்தந்தையாகப் பணியாற்றிய திருத்தந்தை 3ம் ஒனோரியுஸ் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றால், இந்த மன்னிப்பை வழங்குவதாக ஒரு நிபந்தனை விதித்தார். அடுத்த நாள் புனிதர் திருத்தந்தையைச் சந்தித்தார். இந்த அனுமதியும் வழங்கப்பட்டது. அந்நாளிலிலிருந்து "அசிசியின் மன்னிப்பு" விழா, ஆகஸ்ட் முதல் தேதிக்கும், அடுத்த நாள் சூரியன் மறையும் வரைக்கும் சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

## சுடர் வாசகர் போட்டி 25 முடிவுகள்

1. நம் குடும்பம்
2. தூய தோமா திருத்தூதரின் திருவிழா.
3. தூய பிரான்சிஸ் அசிசியார்.
4. 5வது குழந்தை
5. இந்தியாவில், 1986, திருத்தந்தை தூய ஜான் பால்
6. இதை பக்தியோடு அணிவோர் இம்மையிலும், மறுமையிலும் எவ்வித துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லல்பட மாட்டார்கள்
7. தூய அல்போன்ஸா
8. தூய ஸ்கொலாஸ்திகா
9. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் நுஊசு ரோட்டில் கோவளம் என்ற மீனவர் வாழும் கிராமத்தில் உள்ளது.
10. யாக்கோபு, யோவான்
11. எர்மானூஸ்
12. கன்னி மரியாளின் பெற்றோர் சுவக்கீன், அன்னாள்
13. அருளாளர் சாவுரா குரியக்கோஸ் எலியாஸ்
14. பல்த்தசார், கிளாடின்
15. 5 அதிகாரங்கள்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. Ms. Jeyanthi Fernando, Chennai
2. Sr. Amali, Muttukadu, Kancheepuram
3. A. Arockiamary, Dharmapuri

## சுடர் வாசகர் போட்டி - 26

1. ஒரு நாளில் 12 முதல் 16 மணிநேரம் வரை ஒப்புரவு அருட்சாதனம் வழங்கிய அருட் தந்தை யார்?
2. தூய பர்த்தலமேயு எவ்வாறு கொல்லப்பட்டார்?
3. அரசியான தூய கன்னிமரியான் விழா யாரால் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?
4. 12ஆம் நூற்றாண்டின் மாமனிதர் யார்?

5. நம் இந்திய நாடு எத்தனையாவது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றது?
6. திரு யோவான் ஆலயம் கட்டவேண்டிய இடத்தை அன்னை மரியாள் எவ்வாறு அடையாளம் காட்டினார்?
7. இம்மாத இரக்கச் செயலாக ஆசிரியர் கூறுவது யாது?
8. அன்னையின் சேனை (***Malitha of Immaculate)*** சபையை துவங்கியவர் யார்?
9. இவ்வாண்டின் உலக இளையோர் தினம் எங்கே எப்பொழுது கொண்டாடப்பட இருக்கிறது?
10. 'மகனே, எனது உடலை எங்கே வேண்டுமென்றாலும் அடக்கம் செய்யலாம், ஆனால் ஒன்று மட்டும் கேட்டுகிறேன், நீர் எங்கேயிருந்தாலும் ஆண்டவரின் பீடத்தில் என்னை நினைவு கூர்ந்தால் போதும்' கூறியது யார்?
11. தூய பர்த்தலமேயுவின் மற்றொரு பெயர் என்ன?
12. "முதிர்ந்த நெல்லிக்கனியும் மூத்தோர் சொல்லும்............" பூர்த்தி செய்க.
13. தொன் போஸ்கோவின் எத்தனையாவது பிறந்த நாளை திருச்சபை சிறப்பிக்கின்றது?
14. டார்மிஷன் என்பதன் பொருள் என்ன?
15. தூய அல்போன்ஸ் மரிய லிகோரி தனது எந்த வயதில் துறவறத்தை தேர்ந்துக்கொண்டார்?